# <u>பத்திரிக்கை செய்திக்குறிப்பு.</u>

**பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை (ம) தீர்வு) சட்டம் – 2013 – குறித்த விழிப்புணர்வு (ம) பாதுகாப்பு பெட்டி அறிமுக நிகழ்ச்சி.**

**இடம் திருப்பூர், நாள்.30.06.2022.**

பெண்கள் நாட்டை வளர்ச்சிப் பாதையில் முன்னெடுத்து செல்வதில் ஆண்களுக்கு சமமாக கடுமையாக உழைத்து வருகின்றனர். கடந்த 20 ஆண்டுகளுக்கு முந்தைய நிலையுடன் ஒப்பிடுகையில் பணிக்கு செல்லும் பெண்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் கணிசமாக உயர்ந்து வருகிறது. ஒட்டுமொத்த தொழிலாளர் பங்களிப்பில் (Female Labour Force participation) பெண்கள் சதவிகிதம் 2020-21 ஆம் ஆண்டைவிட 2.3% உயர்ந்து முந்தைய 22.8% சதவிகிதத்தை விட 25.1% ஆக உயர்ந்துள்ளது. மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில் பணிக்கு செல்லும் ஆண்களின் எண்ணிக்கை (Employment Population Ratio) 65.7% . பெண்களின் எண்ணிக்கை 54.4% (As on Feb 2020-22) ஆக உள்ளது. திருமணம் மற்றும் குழந்தை பேறுக்கு பிறகு பணிக்கு செல்லும் பெண்களின் சதவிகிதம் 15 to 20% குறைந்து விடுகிறது.

அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் மட்டுமின்றி தனியார் நிறுவனங்கள் மற்றும் கட்டட வேலை, வீட்டு வேலை, செங்கல் சூளை, நூற்ப்பாலைகள் , ஆயத்த ஆடை தயாரிப்பு, பட்டாசு தொழிற்சாலைகள் என பல்வேறு அமைப்பு சாரா தொழில்களிலும் குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு பெண்கள் பணியாற்றி வருகின்றனர். குடும்பத்தையும், குழந்தைகளையும் கவனித்துக்கொண்டு பணிக்கு செல்லும் இவர்கள் பணி நிமித்தம் தங்கும் இடங்களிலும், போக்குவரத்தின் போதும், பணியிடங்களிலும் பல்வேறு பிரச்சனைகளை சந்திக்கின்றனர்.

பெண்களுக்கு குடும்பத்திற்குள் நிகழும் வரதட்சணை கொடுமை, குடும்ப வன்முறை, பாலியல் வன்கொடுமை, கட்டாயத் திருமணங்கள் ஆகியவற்றை எதிர்கொள்ள துறை ரீதியாக 1098, 181 உள்ளிட்ட உதவி எண்களையும் , மனநல ஆலோசனைகளை வழங்கிட குடும்ப ஆலோசனை மையங்களையும், சட்ட உதவி காவல் உதவி/ மருத்துவ உதவி/ தங்குமிடம் ஆகியவற்றுக்கு உதவிட ஒருங்கிணைந்த சேவை

மையங்களையும் துறை நடைமுறைப்படுத்தி கண்காணித்து செயல்படுத்தி வருகிறது. ஆயின் பணியிடங்களில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்பு சம்மந்தப்பட்ட நிறுவனங்களை சார்ந்தது ஆகும்.

பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு தனியாக விடுதிகள், உணவருந்தும் இடங்கள், தண்ணீர் வசதியுடன் கூடிய கழிவறைகள், சமமான பணிக்கு சம ஊதியம், மகப்பேறு விடுப்பு, உள்ளிட்ட இதர விடுப்புகள், குழந்தைகளை பராமரித்திட காப்பகங்கள் ஆகிய வசதிகளை உறுதி செய்வதுடன் சட்டப்படி, பணியிடங்களில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் பாலியல் துன்புறுத்தல்களை விசாரித்திட உள்ளக புகார் குழுவினையும் (Internal complaints Committee) சம்மந்தப்பட்ட தொழில் நிறுவனங்கள் அமைத்திட வேண்டும்.

பணியிடங்களில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் பாலியல் சார்ந்த துன்புறுத்தல்களை தடுப்பதற்கு 2013-ஆம் ஆண்டு மத்திய அரசு மூலம் சட்டம் இயற்றப்பட்டது. பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள்(தடை, தடுப்பு மற்றும் தீர்வு) சட்டம் 2013 எனப்படும் இச்சட்டத்தின்படி 10 நபர்களுக்கு அதிகமாக பணிபுரியும் பணியிடங்கள் அனைத்திலும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்திட நிறுவன உரிமையாளர்கள் உள்ளக குழு அமைத்திட வேண்டும்.

பணியிடங்களில் பெண்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை எதிர்கொள்ளும்போது இப்பிரச்சனைகள் குறித்து மூன்று மாத கால அவகாசத்திற்குள் இத்தகைய உள்ளக புகார் குழுவிடம் எழுத்து மூலம் புகாரளித்து தங்களுக்கு உரிய தீர்வினை பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும், பத்துக்கு குறைவான பணியாளர்களைக் கொண்ட நிறுவனங்களில் பணிபுரியும் பெண்களிடமிருந்தும், தாங்கள் பணிபுரியும் நிறுவனத்தின் செயல்பாடுகள் திருப்தி அளிக்காத நிலையில் பெரிய நிறுவனங்களில் பணிபுரியும் பெண்களிடமிருந்தும், புகார்களைப் பெற ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் மேற்பார்வையில் உள்ளூர் குழு(Local Complaints Committee) ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

**<u>பணியிடங்களில் உள்ளக குழு அமைப்பதற்கான வழிமுறைகள்</u>**

- உள்ளக புகார் குழுவின் தலைவராக நிறுவனத்தின் உயர் பெண் அலுவலர் நியமிக்கப்பட வேண்டும்.
- பெண்களுக்கு எதிரான பிரச்சனைகளுக்கு குரல் கொடுப்பவராகவும், சமூகப்பணி, சட்டம் குறித்த அறிவு பெற்றவராகவும் மற்றும் அனுபவம் உள்ளவராகவும் இருக்கககூடியவர்களில், குறைந்த பட்சம் இருவர் பணியாளர் தரப்பில் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.
- பணிபுரியும் பெண்களின் உரிமை மற்றும் பாதுகாப்பிற்காக, தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதியாக ஒரு வெளிநபரை உறுப்பினராக சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- இக்குழுவின் மொத்தம் நான்கு உறுப்பினர்களில் பாதிக்கு குறையாமல் 50% பெண் உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.

**<u>தொழிற்சாலை உரிமையாளரின் கடமைகள்</u>**

பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல் தொடர்பாக பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளிலிருந்து அவர்களை காத்திட சட்டப்பிரிவு 19-ன்படி பாதுகாப்பான சூழலை உருவாக்க வேண்டியது தொழிற்சாலை உரிமையாளரின் முக்கிய கடமையாகும்.

- பணி செய்யுமிடம் பாதுகாப்பானதாக இருக்க வேண்டும்.
- விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பயிற்சி பட்டறைகள் நடத்த ஏற்பாடு செய்து பணியாளர்களுக்கு இச்சட்டத்தைப் பற்றி விளக்க வேண்டும்.
- உள்ளக புகார் குழு உறுப்பினர்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.
- இக்குழுவானது புகார்கள் எழும் பட்சத்தில் விசாரணை நடத்த தேவையான உரிய வசதி செய்து தர வேண்டும்.

**மேலும், மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு வருடந்தோறும் தங்கள் நிறுவனத்தின் உள்ளக புகார் குழுவிற்கு**

- கிடைக்கப்பெற்ற புகார்களின் எண்ணிக்கை
- முடிக்கப்பட்ட புகார்களின் எண்ணிக்கை
- 90 நாட்களுக்கு மேல் நிலுவையிலுள்ள புகார்களின் எண்ணிக்கை
- நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் கருத்துபட்டறையின் எண்ணிக்கை
- தொழிற்சாலை உரிமையாளரால் எடுக்கப்பட்ட நடவடிக்கை

ஆகியவை குறித்து அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும்.

**<u>அபராதம்</u>**

- உள்ளக புகார் குழு அமைக்காமலிருந்தால், பரிந்துரைகளுக்கு நடவடிக்கை எடுக்காமலிருந்தால், மற்றும் ஆண்டறிக்கை சமர்ப்பிக்காமல் இருந்தால் தொழிற்சாலை / நிறுவன உரிமையாளருக்கு ரூ.50,000/- அபராதம் விதிக்கப்படும். இச்சட்டத்திற்கு எதிராக நிறுவன உரிமையாளர் நடந்துக்கொண்டால் நிறுவனத்தின் உரிமை ரத்து செய்யப்படும் மற்றும் நிறுவனம் புதுப்பிக்கப்படாது.

**<u>சட்டத்தின்படி குழுக்கள் அமைக்கப்பட்ட விவரம்.</u>**

தமிழக அரசு பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்(தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம் 2013-ன்படி அரசு துறை நிறுவனங்களிலும், தனியார் நிறுவனங்களிலும், தொழிற்சாலைகளிலும் பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்திட உள்ளூர் மற்றும் உள்ளக குழுக்களை அமைக்கும் பணியினை முனைப்புடன் கண்காணித்து செயல்படுத்தி வருகிறது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் மேற்பார்வையில் மாவட்ட சமூக நல அலுவலரை அலுவல் சாரா உறுப்பினராகக் கொண்டு 35 மாவட்டங்களில் உள்ளூர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதிய 3 மாவட்டங்களில் உள்ளூர் குழுக்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த உள்ளூர் குழுக்கள் மூலம் இதுவரை 103 புகார்கள் பெறப்பட்டு 89 புகார்கள் மீது விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 14 புகார்கள் மீது முதல் கட்ட விசாரணை முடிவடைந்துள்ளது. மேலும் அரசுத்துறை அலுவலகங்களில் 1031 உள்ளக புகார் குழுக்களும், தனியார் நிறுவனங்களில் 1552 உள்ளக புகார் குழுக்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இச்சட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 558 இடங்களில் குறிப்பாக தனியார் நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள், பெண்கள் அதிகம் பணிபுரியும் தொழிற்சாலைகள் ஆகியவற்றில் நடத்தப்பட்டுள்ளது.

## <u>பாதுகாப்பு பெட்டி</u>

பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல்களை எதிர்கொள்ளும் பெண்களில் நால்வரில் ஒருவர் மட்டுமே புகார் அளிக்க முன்வருகின்றனர். புகார்களை பகிரங்கமாக தெரிவிக்கும் பட்சத்தில் தங்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கை, பதவி பறிப்பு, பதவி உயர்வு நிறுத்தம் அல்லது தன்னைப் பற்றியே கேலி பேசக்கூடும் என அஞ்சுவதால் பெண்கள் இங்ஙனம் புகார் அளிக்க முன்வருவதில்லை.

இதனால் பெண்கள் தங்களுக்கு நேரும் பாலியல் பிரச்சனைகளை எதிர்கொள்ள பயந்து சிலர் பணியினை விட்டு விலகி வருகின்றனர் அல்லது மன அழுத்தத்துடன் பணிபுரிந்து தங்கள் ஆரோக்கியத்தை கெடுத்து கொள்வதுடன் பணியிடத்தில் அவர்களின் திறன் வெளிப்பாடும் குறைந்துவிடுகிறது.

இதனைத் தவிர்க்க இந்நிகழ்ச்சியில் பெண்களிடமிருந்து இரகசியமான முறையில் இத்தகைய பாலியல் சார்ந்த குற்றச் செயல்கள் குறித்த புகார்களை எழுத்து மூலம் பெறுவதற்கு **“பாதுகாப்பு பெட்டி”** அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இப்பெட்டி இரு பூட்டுகளுடன் உள்ளே பெறப்படும் புகார் கடிதங்கள் தெரியும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. பெட்டியின் சுவர்களில் உள்ளக குழு உறுப்பினர்களின் பெயர்கள், மகளிர் உதவி எண், பாலியல் துன்புறுத்தல்களை நிறுத்துவதற்கான சின்னம், நிறுவனத்தின் பெயர் உள்ளிட்ட விவரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

பணிபுரியும் இடங்களில் பெண்கள் உணவு அருந்தும் இடம், தங்குமிடம், கழிப்பிடம் உள்ளிட்ட இடங்களில் கண்காணிப்பு கேமரா பார்வைக்கு அப்பாற்பட்டு இப்பெட்டிகள் வைக்கப்படும். பாதுகாப்பு பெட்டிக்குள் புகார்கள் பெறப்பட்டால் உடன் உள்ளக புகார் குழு உறுப்பினர்களுக்கு தெரிவித்து பெட்டி திறக்கப்பட்டு மனு மீது உரிய விசாரணை மேற்க்கொள்ளப்படும். பெட்டியில் அமைக்கப்பட்டுள்ள ஒரு பூட்டின் சாவி உள்ளக புகார் குழு தொழிலாளர் உறுப்பினரிடமும், மற்றொரு சாவி உள்ளக புகார் குழு சமூக அமைப்பு சார்ந்த உறுப்பினரிடமும் இருக்கும் என்பதால் மனு மீது உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நம்பகத்தன்மை மனுதாரருக்கு ஏற்ப்படுத்தப்படும்.

தொழிற்சாலைகளில் பெண்கள் அதிகம் பணிபுரியும் இடங்களில் உள்ளக குழு அமைத்தல் மற்றும் பாதுகாப்பு பெட்டி வைத்தல் போன்ற செயல்பாடுகள் பெண்களுக்கு பாதுகாப்பான பணி சூழலை ஏற்படுத்தி தொழில் சார்ந்த நல்லுறவு மேம்படுத்த உதவும். இதன்மூலம் சர்வ தேச வணிக நெறிமுறைகளுக்கு உரிய தொழில் அங்கீகாரம் கிடைக்கப்பெற்று உற்பத்தி திறன் அதிகரிக்கும். எனவே, தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளாக இக்கருத்தரங்கில் பங்கேற்றுள்ள அனைவரும் தங்கள் பணியிடங்களில் உள்ளக குழு மற்றும் பாதுகாப்பு பெட்டிகள் அமைத்து பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும்,

சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க உதவிடவும் துறை சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சமூக நலம் மற்றும் மகளிர்
உரிமைத்துறை.